Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருக்குறளில் பக்தி மற்றும் இசை

31

இரா. பிருந்தா
போதனாசிரியர் (இசைத்துறை)
சுவாமி விபுலானந்த அழகியறல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
brindha.ragavan@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:**

பொய்யாமொழிப்புலவர் படைத்த அற்புத படைப்பான திருக்குறளானது சமூகத்தின் ஏற்றதிற்கென தோன்றிய நீதி நூல் என்றால் மிகையாகாது. ஈறடியில் உலகத்தை அடக்கி நீதி கருத்துக்களோடு மக்கள் ஒழுக வேண்டிய ஒழுக்க நெறிகளையும் படைத்துள்ளார். மேலும் வள்ளுவன் எந்த மதத்தையும் சாராது நடுவு நிலைமையில் நின்று கருத்துக்களைப் பகர்ந்துள்ளார். இவ் படைப்பானது தமிழருக்கும் தமிழினத்துக்கும் பெரும் ஊன்று கோலாக திகழ்ந்துள்ளதென்பது காலம் காலாமாக உலகறிந்த விடயமாகும். வள்ளுவன் பக்தி நெறியினை எவ்வாறு காண்பிக்கின்றார் என்றால் நடுவு நிலைமையை நிலைநாட்டுபவர்களை அதாவது மன்னனாயினும் நடுவு நிலைமையை நிலைநாட்டுவானாயின் தெய்வம் என்று குறிப்புரைக்கின்றார். அதன் மூலம் அவர் மதச்சார்போடு உரைக்கவில்லை என்பது அறிய முடிகின்றது. அதேபோல திருக்குறளை இசையோடு நோக்கின் பண் என்பதனை பாடலோடு பொருந்தி இருக்க வேண்டுமென குறள் பாக்களில் எடுத்தியம்பப்பட்டுள்ளது. அத்தோடு அக்கால கட்டத்தில் பயன்பாட்டிலிருந்த இசைக்கருவிகளை குறள்பாக்களில், சிற்சில இடங்களில் காணமுடிகின்றது. இந்தவகையில் திருக்குறள் ஒரு சிறந்த இயற்றமிழ் நூல் மட்டுமின்றி ஓர் இசைத்தமிழும் கொண்ட நூலாக இலக்கியத்தோடு பக்தியையும் சரியான விதத்தில் வள்ளுவன் எடுத்துக் காட்டியுள்ளமை சிறப்பம்சமாகும்.

திறவு சொல்: வள்ளுவன், திருக்குறள், இசை, பக்தி

- **அறிமுகம்:**

உலக சிந்தனையின் மணிமுடியை போலவும் நம் தமிழ் தாய் மொழியின் தலையாய அணிகலனாகவும் விளங்கும் சிறப்பு பெற்ற திருக்குறளானது தெய்வப்புலவரான திருவள்ளுவரால் இறவாத இலக்கியமாக (கி.மு முதலாம் நூற்றாண்டில்) எழுதப்பட்ட தொன்மை வாய்ந்த இலக்கியமாம். ஆழ்ந்த கருத்துக்களோடும், அறத்தையும் நீதியையும் விளங்குவதாகவும், உலகத்துப் பார்வையின் போக்கையும் கொண்ட தன்னிகரில்லாத் தனி இடத்தைப் பெற்ற இலக்கியமாகும். அத்தோடு மானுடப் பண்புகளை விளக்கி, மனித குலத்திற்கு மாபெரும் அறநூலாய் விளங்கும் இந்நூலானது ஞானத்தின் களஞ்சியமாகவும் புனித நூலாம் பைபிளுக்கு அடுத்தபடியாக, உலகளாவிய ரீதியில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட தனிப்பெரும் சிறப்புடைய இலக்கியமாகும். 1330 குறட்பாக்களை 133 அதிகாரங்களாக வகுத்து மானுடத்தின் விழுமியப் பண்புகளையும் அதன் அறம் சார்ந்ததாயினும், உலகியல் சார்ந்தாயினும், அவற்றை உலகளாவிய ரீதியில் எடுத்துக்கூறும், எச்

சமயமும் சாராத ஓர் தலைசிறந்த இலக்கியமே திருக்குறளாகும். வள்ளுவர் படைத்த இரு சீர் வெண்பாவானது எக்காலத்துக்கும் பொதுவான கருத்துக்களை இயம்பும் இந்நூல் தற்காலத்தில் ஒவ்வொரு மனிதனும் பின்பற்ற வேண்டிய உன்னத நூலாகும்.

பொய்யாமொழிப் புலவரின் சொல்லாட்சியானது எங்கும் தமிழ், தமிழர் என்னும் சொற்கள் பயன்பாடில்லாத வகையில் அமைந்துள்ளமை சிறப்பானதாகும். தெய்வம் எனும் சொல் பயன்பாடும் ஆறு இடத்தில் மட்டுமே காணமுடிவதோடு கடவுள் என்னும் சொல்லானது எந்த அதிகாரத்திலும் இல்லை. இருப்பினும் பிற்கால தொகுப்பாளர்கள் முதலாவது அதிகாரமான வாழ்த்து என்பதனை கடவுள் வாழ்த்து என குறிப்பிட்டு இருக்கலாம் என அறியமுடிகிறது. மேலும் பல்வேறு உரையாசிரியர்கள் உரை வகுத்திருந்தாலும் பரிமேலழகர் உரையே சாலச்சிறந்தது என உரைக்கின்றனர்.

- **திருக்குறளில் பக்தி:**

வள்ளுவன் வகுத்த பொருளமைவில் பக்தி நெறியினை ஆழ நோக்கின் பொருளறிய முடிகிறது. கடவுள் வாழ்த்து முதலாம் அதிகாரத்தில்

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவார்………..” (குறள்,10)**

அதேபோல

**“முறைசெய்து காப்பாற்றும்……..” (குறள்,388)** எனும் குறளில் மன்னனை இறைவன் என உரைக்கின்றாரா? எனவும் கடவுள் வாழ்த்தில்

**“அகர முதல எழுத்தெல்லாம்……..” (குறள்,1)** எனத்தொடங்கும் முதற்குறளில், முதற் கடவுளது உண்மையைச் சொல்லி அடுத்துவரும் குறளிலே ஆன்மாக்களாகிய உயிர்கள் பிறவியறுத்தற்கு வழி கூறுகின்றார். அதனை வாலறிவன் நற்றாள் தொழுதலே, அவர் காட்டும் வழி.

**“கற்றதனால் ஆய பயன்………” (குறள், 2)** என்பதில் “நற்றாள்” என சுட்டுவது, இறைவன் தன் திருவடியையும், திருவடியோடு கூடிய உருவத் திருமேனியையுமே வள்ளுவர் காட்டத் தலைப்படுகிறார். ஆன்மாக்களுக்காக இரங்கி, இறங்கி உடல் பெற்றிருக்கும் இறைவன் அருட்தன்மையே இக்குறள் விளக்கி நிற்கின்றது.

**“தெய்வத்தான் ஆகா தெனினும்……….” (குறள்,619)** எனும் குறட்பாவானது விடாமுயற்சியின் பலனையும் ஊழ்வினையில் இடையூறு ஏற்பட்டாலும் மனம் தளராது முயன்றால் விதியையும் வெல்லலாம் என்கிறது. எனவே மன்னனைத் தான் இறைவன் என தெய்வத்தால் ஆகாத காரியத்தையும் முயற்சித்தால் முடியுமென உலகப்பொதுமறை உரைக்கின்றது.

அதேபோல

**“வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு……..” (குறள்,4)** எனும் குறட்பாவில் துன்பமில்லாத வாழ்க்கையைப் பெற, விருப்பு வெறுப்பு அற்ற இறைவன் திருவடிகளை மனத்தால் நினைப்பவர்களுக்கு கிட்டுமென உரைக்கின்றார் வள்ளுவன். ஐம்புலன் ஆசைகளை ஒடுக்கி இறைவன் மீது ஒப்பற்ற அன்பினை செலுத்துபவர்களுக்கு அறியாமையில் வரும் நன்மை, தீமையின் பயன்கள் நெருங்கா என்பதனை

**“பொறிவாயில் ஐந்தவித்தான்……….” (குறள். 6)**

**"இருள்சேர் இருவினை………" (குறள். 5)** என்னும் குறட்பாக்கள் உரைக்கின்றன. அத்தோடு தன்நிகர் இல்லாத இறைவனின் திருவடிகளை நினையாமல் இருப்பவர்களது துன்பங்களைப் போக்கிக் கொள்ள இயலாது என

**"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்………." (குறள். 7)** எனும் குறட்பா உரைக்கின்றது.

**"கோளில் பொறியிற்…….." (குறள். 9)** என்னும் குறளில் கூறுவது யாதெனின் எட்டு குணங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இறைவனின் திருவடியை தொழாதவர் தலை இருந்தும் பயன் இல்லாததே என்கிறார்.

முதலாம் அதிகாரத்தில் முழுவதும் இறைவனை நினைத்தாலே வினையகலும் விதமாக உரைக்கின்றார்.

**"மலர்மிசை ஏகினான்…." (குறள். 3)**

**"பிறவிப் பெருங்கடல்……." (குறள்.10)** எனும் குறட்பாக்கள் மனிதனின் மனமாகிய மலரில் வீற்றிருக்கும் திருவடிகளைத் துதிக்கின்றவர்கள், துன்பமின்றி வாழ்வதுடன் பிறவிக் கடலையும் நீந்துவர் என அழகுற எழுதியம்பியுள்ளார். இதன் மூலம் வள்ளுவரின் உள்ளக் கருத்தானது இறைவனை மட்டும் நம்பி சோம்பி இருப்பதால் நடப்பது ஒன்றும் இல்லையாகும். மேலும் மன்னனே இறைவன் என்றவாறல்லாது இறைவன் போல விருப்பு வெறுப்பற்ற தன்மையுடன் நடுவுநிலைமை தவறாது நீதி அளிக்க வல்லவன் என உரைக்கின்றார். ஆகவே வள்ளுவன் இறைவன் இல்லை என்று உரைக்கவில்லை இம்முதல் அதிகாரத்தில் இறைவன் யார் என்பதனையும் அவன் பால் கொண்ட பக்தியையும் வள்ளுவன் உரைக்கின்றார்.

- **திருக்குறளில் இசை:**

இவ்வாறு இருக்கையில் திருவள்ளுவரின் இசை என்பதற்கு 'புகழ்' என்பதை கருத்தில் கூறவிழைகிறார் முனைவர். அங்கயற்கண்ணி அவர்கள்.

**"ஈதல் இசைபட வாழ்தல்……." (குறள். 231)** எனும் குறளில் இசை என்று வரும் இடங்களில் புகழ் என்னும் பொருளையே நிலை நிறுத்துகிறார் வள்ளுவன். சங்ககால இசைக்கும், காப்பிய கால இசைக்கு இடைப்பட்ட காலத்தில் இசை நிலையை உணர்த்தும் பாடல்களாக வள்ளுவனுடைய திருக்குறள் அமைகிறது. இதன் மூலம் திருவள்ளுவரின் இப்படைப்பு இசை உலகில் தனித்தோர் இடம்பெறுகின்றது.

**"பண்என்னாம் பாடற்கு………." (குறள். 573)** எனத் தொடங்கும் குறள்பாவானது பண் பாடலோடு பொருந்தியிருக்க வேண்டும் என விளக்கமளிக்கிறார். இதற்கு பரிமேலழகர் **"பண்களாவன பாலையாழ் முதல் 103 என்றும் பாடற்றொழில்களான யாழின் கண் வார்த்தல் முதலிய எட்டும், வண்ணங்கள் 76ம் என இவற்றோடியையாது வழிப் பண்ணாற் பயனில்லாவாறு போலக் கண்ணொற் பயனில்லையென்பதாம்" (குறள். 573)** என பொருள் உரைக்கிறார். இதன் மூலம் பண்டைய தமிழர் கையாண்ட 103 பண்கள் என பரிமேலழகர் உரை வகுத்ததன் மூலம் அக்காலத்திலேயே இது வழக்கத்தில் இருந்துள்ளது என அறிய முடிகின்றது.

மேலும் மக்கட் பேற்றினை பற்றி

**"குழல் இனிது யாழ்இனிது என்பதம்………" (குறள். 66)** என குழந்தையின் இனிமை தன்மையை குழலிசை இனிது, யாழிசை இனிது என்பர் மழலைச் சொல் கேளாதவர் என்பது இக்குறளின் பொருள். இசை நிலையில் குழல் கூறி பின்பு யாழ் கூறியதிலிருந்து தோற்றத்தின் ரீதியிலும் குழல் பின்னரே யாழ் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறளே உரைக்கின்றது குழலினை பின்பற்றி யாழ் தோன்றியுள்ளதென எனினும் முழவிசைக் கருவியினை பற்றிய எக்குறிப்பினையும் காணமுடியவில்லை.

இரண்டாயிரமாம் ஆண்டு முன்பு தோன்றிய குறட்பாக்களானது தேவார இசைக்கும், சிலப்பதிகார இசைக்கும் முன்பு தோன்றியது இசையினை உரைப்பது. இதன் மூலம் தற்போதைய கர்நாடக இசைக்கு தோற்றுவாய் என்றும் சான்றோர் உரைக்கின்றனர். ஒரே பொருளில் பாடல் அமைப்பது திருக்குறளிலேயே ஆரம்பித்துள்ளது. 'கல்வி'யெனும் அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களும் ஒரு பொருளிலேயே தோன்றியுள்ளது. அமைப்பிலே சிலப்பதிகாரமும் பின்பு தேவாரமும் இதனை பின்பற்றி பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்பிலும் காணக்கிடைக்கின்றமை சிறப்பே. இதன் காரணமாகவே இசை பாடல்களுக்கு தந்தையென போற்றப்படுகிறார் வள்ளுவன்.

திருக்குறளின் சிறப்பை உணர்த்துவதற்கு இசையை ஊடகமாக பயன்படுத்தியுள்ளனர். 1958ம் ஆண்டு திருக்குறள் மதுரை கீர்த்தனை என்னும் தலைப்பில் ஸ்வரக் குறிப்புகளுடன் வெளியிட்ட பெருமை மாயூரம் விசுவநாத சாஸ்திரி அவர்களைச் சாரும். திருக்குறள் முழுமையாக 289 கீர்த்தனைகளாக்கி ஒவ்வொரு தொகுதிக்கும் 42 கீர்த்தனை வீதம் அமைத்து தொகுதிகளாக வெளியிடப்பட்டன. அதே போல 1977ம் ஆண்டு புலவர் பொ.முனியப்பன் எனும் தமிழ் ஆசிரியரால் திருக்குறள் காவடிச்சிந்து வெளியிடப்பட்டது. இவ்வாறாக திருக்குறளை அதன் பொருள் உணர வைக்கும் வகையில் வடிவமைத்து இன்றும் மங்காப் புகழோடு உயிரோட்டமாக காணப்படுகின்றது என்பதிலிருந்து திருக்குறள் சிறந்த இலக்கியமாக இருப்பினும் இசை தமிழுக்கும் ஏற்றாற் போலவும் தற்கால இசைக்கு முன்னோடியாக திகழ்ந்தது என்னும் சிறப்புப் பெற்றதே.

இவ்வாறு அற்புதப் பொக்கிஷங்களை தரும் சுரங்கமாக வள்ளுவர் தம் ஒரு குறளே விளங்குவதைக் காண, வள்ளுவம் நமது வாழ்வோடு பக்தியாகவும் இசையாகவும் இன்னும் பல வடிவங்களில் இணைந்ததொன்றாகக் காணப்படுகின்றது என்றால் மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்:**


- திருக்குறள், பரிமேலழகர் உரை.
- விசுவநாத சாஸ்திரிகள், டி.ஆர். மாயூரம், 1958, திருக்குறள் மதுர கீர்த்தனை, முதற்பகுதி, சங்கீதசதனம், சென்னை, திருக்குறள் மதுர கீர்த்தனை, 2ம் பகுதி 1987.
- முனியப்பன், பொ. 1977, திருக்குறள் காவடிச்சிந்து, கழக வெளியீடு, சென்னை.